
# உதகமண்டலம்
# அரசு அருங்காட்சியகக் கையேடு



ஆசிரியர்
முனைவர் சி. மகேசுவரன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்

வெளியிடுபவர்
அருங்காட்சியகங்களின் ஆணையர்
அரசு அருங்காட்சியகம், சென்னை–600 008.

# உதகமண்டலம்
# அரசு அருங்காட்சியகக் கையேடு

11925

எண். 11925

ஆசிரியர்

**முனைவர் சி. மகேசுவரன்,**

காப்பாட்சியர்

அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்.

*வெளியிடுபவர்*

அருங்காட்சியகங்களின் ஆணையர்,

அரசு அருங்காட்சியகம், சென்னை-600 008.

கண். தீனதயாளன், இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்

அரசு அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

# அணிந்துரை

உதகமண்டலம் மாவட்டம், மாவட்ட அருங்காட்சியக வரிசையில் எட்டாவது மாவட்ட அருங்காட்சியகமாக 1989-ம் ஆண்டு துவங்கப்பட்டது. மற்ற மாவட்ட அருங்காட்சியகத்திலுள்ளது போல் இம்மாவட்டத்திலும் தொல் பொருளியல், மானிடவியல், நாணயவியல், கலை, தாவரவியல், விலங்கியல், புவியமைப்பியல் ஆகிய அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த பொருட்கள் சிறப்புற காட்சிக்கு அமைக்கப் பட்டுள்ளன. மக்கள் தொகையில் மாநிலத்திலேயே மிகக் குறைந்த எண்ணிக்கை உடைய இம் மாவட்டத்தில்தான், தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான பழங்குடி இன மக்கள் வாழ்கின்றனர்.

இந்த மாவட்டத்தின் இயற்கைச் சிறப்புகளையும் பழங்குடி மக்களின் பண்பாட்டுச் சிறப்பையும் இந்த அருங்காட்சியகம் செவ்வனே விளக்குகிறது. இந்த மாவட்டத்தின் அருங்காட்சியக முன்னாள் காப்பாட்சியராக முனைவர் சி. மகேசுவரன் செவ்வனே பணியாற்றியுள்ளார். இக்கையேடு இம்மாவட்டத்தைப் பற்றிய சிறப்பையும், காட்சிப் பொருட்களைப் பற்றியும் சிறப்பாக எடுத்தியம்பும் என்று நம்புகிறேன். விரைவில், மாவட்ட ஆட்சியர் உதகை மாவட்டம் மற்றும் தோட்டத் துறை அவர்களின் சீரிய ஒத்துழைப்புடன் இந்த அருங்காட்சியகம் ஆசியக் கண்டத்திலேயே மிகப் பெரிய ரோஜாப் பூங்காவின் அருகாமைக் கட்டிடத்திற்கு மாற்றப்படவிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும்.

10.7.97

(கண். தீனதயாளன்)

# உதகமண்டலம்
# அரசு அருங்காட்சியகக் கையேடு

## நீலகிரி மாவட்டத்தின் சிறப்பு

இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னிந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி, மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள் சந்திக்கும் பெரும் பீடபூமியின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியே நீலகிரி மாவட்டம். நீலகிரி உயிர்ச் சூழலின் பெரும் பரப்பு இம்மாவட்டத்திலேயே அடங்கி யுள்ளது ஒரு சிறப்பாகும், ஏனைய தமிழக மாவட்டங்களைக் காட்டிலும் கூடுதலான வகையில், பத்துக்கும் மேற்பட்ட பல்வேறு பழங்குடியினர் குழுக்களை நீலகிரி மாவட்டம் கொண்டிருப்பதால் இதனைத் "தமிழகத்தின் பழங்குடியினர் மாவட்டம்" என அழைக்க வாய்ப்புள்ளது மற்றுமொரு சிறப்பாகும், எனினும், இம் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினரது எண்ணிக்கை 21,360தான் (அதாவது, 3.3 விழுக்காடுதான்) என்பது குறிப்பிடத்தக்கது.

'மலைகளின் அரசி' என புகழ்பெறும் 'ஒத்தகல்மந்து (என உள்ளூர் மக்களால்' அழைக்கலாகும்) எனும் 'உதகமண்டலம்', வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்ட லூயி பாஸ்டர் நினைவாக அமைந்திட்ட 'பாஸ்டர் நிறுவனம்' அமைந்துள்ள குன்னூர் (குன்றூர்), முதுமலை வன உயிரிகள் உய்விடம் இடம் பெறும் 'கூடலூர்' காண்போரை யெல்லாம் கவர்ந்திழுக்கும் கோடநாடு காட்சி முனையைத் தன்ன கத்தே கொண்ட 'கோத்தகிரி' ஆகியவை இம் மாவட்டத்தின் நான்கு வட்டங்கள்.

## மாவட்டத்திற்கு ஓர் அருங்காட்சியகம்

தாய்த் துறையாகிய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் இரண் டாம் நிலைத் திட்டத்தின் வாயிலாக மாவட்டத்திற்கு ஓர் அருங்காட்சியகம் அமைக்கும் பெரும் பணியைத் தனது அருட்காட்சியகத் துறையிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்தது. இவ் வரிசையில், எட்டாம் மாவட்ட அருங்காட்சியகமாக நீலகிரி

மாவட்டத்தில் 'மலைகளின் அரசி' எனப் புகழாரம் சூட்டப்படும் உதகமண்டலத்தில் 1989-ல் ஓர் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது.

உதகமண்டலத்திலுள்ள நீலகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகம் 'பன்னாட்டு அருங்காட்சியகங்கள் குழு'வின் (ICOM) வரையறைக்கு உள்பட்டு, இவ் அருங்காட்சியகம் "சமுதாயப் பணியிலும் - அதன் முன்னேற்றத்திலும் இலாப நோக்கற்ற ஒரு நிறுவனமாகப் பொது மக்களுக்கென திறந்து வைக்கப்பட்டு அவர்தம் கல்வி, அறிவு மேம்பாடு, மற்றும் பொழுது போக்கிற்கெனச் செயலாற்றுகிறது."

இவ் அருங்காட்சியகத்தின் (காட்சிக் கூடங்களிலும் இருப்புத் தொகுப்புகளிலும் உள்ள) காட்சிப் பொருள்களின் வாயிலாக மாவட்டத்தின் வரலாறு, கலை, பண்பாடு, தாவரவினங்கள், விலங்கினங்கள் மற்றும் இன்னோரன்ன மரபுச் செல்வங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. இதனால் இம் மாவட்ட அருங்காட்சியகம் "பல்நோக்கு அருங்காட்சியகம்" அல்லது "பல துறை அருங்காட்சியகம்" என அழைக்கப்படுதல் பொருத்தமாகும்.

## அறிமுகக் காட்சிக்கூடம்

மாவட்டத்தின் நான்கு வட்டங்களையும் அவற்றின் தலைமையிடங்களையும் காட்டும் பல வண்ண 'மாவட்ட நில வரைபடம்' ஒன்றும் மாவட்டத்தின் முதன்மைச் சுற்றுலா இடங்களான, 'தாவரவியல் பூங்கா', 'சிறுவர் பூங்கா', 'படகு இல்லம்', 'தொட்டபெட்டா கூசர்நோக்கு இல்லம்', 'கொல்லி மலைக் காட்சி', 'ஊசித் தொழிற்சாலை', உள்ளிட்டவற்றின் வண்ண ஒளிப் படங்களும் இம் மாவட்டத்தைப் பார்வையாளருக்கு அறிமுகப்படுத்தும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டு இவ் அருங்காட்சியகத்தின் 'அறிமுகக் காட்சிக்கூடம்' அமைகிறது.

## வரலாற்றுக்கு முந்தைய காலக் காட்சிக்கூடம்

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலும் இக் கவின்மிகு பீட பூமியில் மாந்தர் வாழ்ந்த இடங்கள் நிலவின என்பதை எடுத்துரைக்கும் சான்றுகளாக (இம் மாவட்டத்தின்) 'சிகூர்', 'வெள்ளரிக்கொம்பை', 'கொணவக்கொரை' முதலான இடங்களில் காணலாகும் வரலாற்று முந்தைய காலப் 'பாறை ஓவியக் காட்சிகள்' எண்ணெய் வண்ண

ஓவியங்களாக இக்காட்சிக் கூடத்தில் அழகுறக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், அளவிலும் வடிவிலும் தனித்தன்மையுடன் விளங்கும் அடுக்குச் சுற்று விளிம்புடைய சுடுமண் ஈமத்தாழிகளின் வாயிலாகவும் விலங்குருவம் அல்லது மாந்தருவம் கொண்ட அவற்றின் சுடுமண் குடிகள் வாயிலாகவும் இம்மாவட்டத்தின் (இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முந்தைய) பெருங்கற் கால (இரும்புக் கால)ப் பண்பாட்டு மரபு இக்காட்சிக் கூடத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவற்றுடன், ஓரிணை வெண்கலச் கிண்ணங்களும் இக் காட்சிப்படுத்தலில் காட் டப்பட்டுள்ளன. இவ் அனைத்துப் பெருங்கற்காலக் காப்பொருள்களும் சிறப்பான முறையில் இதற்கென வடிவமைக்கப்பட்ட ஓர் 'அரை-சூழல்' காட்சிப் பெட்டியினுள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## சிற்பப் பூங்கா

'காளி', 'சுப்பிரமணியர்', சண்முகர்', 'தேவி', உள்ளிட்ட சிற்ப வரிசைகளைக் கொண்ட ஒரு சிற்பப் பூங்கா இம்மாவட்ட அருங் காட்சியகத்தின் தோட்டப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

## வெண்கலப் படிமக் காட்சிக்கூடம்

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 'துர்கா' (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) 'நடராசர்' (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) 'ஞானசம்பந்தர்' (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு), கணேசர் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு), 'திருமால்' (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) 'பார்வதி' (கி.பி. 18-ஆம் நூற்றாண்டு) ஆகிய சோழர் கால வெண்கலப் படிமங்கள் இக்காட்சிக் கூடத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

## மரச் சிற்பங்கள் காட்சிக்கூடம்

இக் காட்சிக்கூடத்தின் சுவர்ப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 'குதிரை வீரன்', 'யானை மீதான யாளி', 'பாற்கடல் கடைதல்', 'கணபதி', 'தேவியருடன் திருமால்', 'இலிங்கோத்பவர்', 'தண்டபாணி', 'சூரியன்', 'கங்கை' முதலிய மரச் சிற்பங்களிலிருந்து நமது பண்டைத் தமிழர் கல், உலோக படிமவரைவியல் அறிவுடன் மரங்களிலும் சிற்பம்

செதுக்கும் திறன் பெற்றிருந்தனர் என்ற உண்மை வெளிப்படக் காணலாம்.

## நாணயவியல் காட்சிக்கூடம்

நீலகிரியின் பண்டைக் காசுகளான 'முத்திரைக் காசுகள்', 'மைசூர் திப்பு சுல்தான் காசுகள்', 'புதுக்கோட்டை அம்மன் காசுகள்', 'திருவிதாங்கூர் காசுகள்', 'ஆங்கிலேயக் கிழக்கிந்திய கும்பினியர் காசுகள்', 'பிரெஞ்சுக் கும்பினியர் காசுகள்' ஆகியன இக்காட்சிக் கூடத்திலுள்ள ஒரு சுவர்க் காட்சிப் பெட்டியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## கவின்கலைக் காட்சிக்கூடம்

(இராமாயண) சேதுபந்தனக் காட்சியைக் காட்டும் செப்புத் தகடு, சிருக்கு நீக்கிகள், மாலை மாற்றிக் கொள்ளும் மண மக்களைக் காட்டும் பாக்குவெட்டி, யாளி மீதான கிளியைக் காட்டும் பாக்கு வெட்டி, தாமரை மொட்டு வடிவ நடுப் பகுதி கொண்ட தொங்கும் சர விளக்கு, விளையாட்டுப் பொருளான அம்மி-குழவி, பல அடுக்குகள் கொண்ட கற்பூரத் தாங்கி, உலோகத்தாலான சங்கு, சாம்பிராணித் தாங்கி உள்ளிட்ட வீட்டுப் பயன்பாட்டு உலோகத் தொழிற்கலைப் பொருள்கள் இக்காட்சிக்கூடத்தில், காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

## அஞ்சல்வில்லையியல் காட்சிக்கூடம்

அஞ்சல் துறையின் அஞ்சல்வில்லையியல் பிரிவிலிருந்து தொடர்ந்து வெளியிடப்பட்டு, கொடையாய் பெறப்பட்ட முத்திரை யிடப்பட்ட அஞ்சல்வில்லைகள் ஒட்டப்பட்டுள்ள முதல் நாள் அஞ்சல் உறைகள், அவை தொடர்பான விளக்கக் கையேடுகள் உள்ளிட்ட வற்றுள் தெரிவு செய்யப்பட்ட ஒரு திரள் பார்வையாளரிடையே அஞ்சல்வில்லையியல் திரட்டும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இக் காட்சிக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## பழங்குடியினர் காட்சிக்கூடம்

இக்காட்சிக் கூடத்தில், அழகுணர்ச்சியுடன் வடிவமைக்கப்பட்ட சூழல் காட்சிப் பெட்டி ஒன்றின் உள்ளே (பயன்பாட்டுத் தன்மையும்

11925

கவின் தன்மையும் கொண்ட) தொதவப் பழங்குடியினரது கலைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இச் சூழல் காட்சிப் பெட்டியின் வாயிலாகவும் இதை ஒட்டியுள்ள பக்கச் சுவர் படிமேடை வாயிலாகவும் தயிர் கடையும் மத்து, வெண்ணெய்க் குடுவை, போன்ற பிரம்பு, மூங்கில் பொருள்களும் கவின்மிகு பழங் குடியினரது பால் பண்ணை அடிப்படையிலான பண்பாடும் மேம்படுத்திக் காட்டப் பட்டுள்ளது.

இக்கலைப் பொருள்கள் தவிர, (தனித்தன்மை வாய்ந்த ஜியோமிதி வடிவங்கள் கொண்ட) புத்குளி எனும் பின்னலாடைப் போர்வை, கைத்தடி, (எருமைப் பலியிடலில் பயன்படுத்தப்படும்) மரக் கோல் படைக் கருவி, கம்பளி நூல்களுடன் பூப்பின்னல் ஊசி, தொதுவக் குழல் மாதிரி, ஆகியனவும் இக்காட்சிக் கூடத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இக்காட்சிக் கூடத்தில், (நீலகிரியின்) ஏனையப் பழங் குடியினரது தெரிவு செய்யப்பட்ட கலைப் பொருள்கள் என்ற வகை யில் கோத்தப் பழங்குடியினரது மரத்தில் செதுக்கப்பட்ட கைத்தடி, இரும்பாலான ஓரினை, களைக் கொத்துகள் குறும்பப் பழங்குடியினரது வில்-அம்புகள், மூங்கில் பாண்டம் இருளப் பழங்குடியினரது காற்றுத் துளை இசைக் கருவி, பணியர் பழங்குடியினரது தோலடி இசைக் கருவி, போன்றவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன, இவற்றுடன் அட்டைகளில் ஒட்டப்பட்ட வண்ண ஒளிப் படங்கள், இந்திய மையால் வரையப்பட்ட கோட்டு ஓவியங்கள் உள்ளிட்ட துணைக் காட்சிப் பொருள்களும் (இங்கு) காட்சிப்படுத்தலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## விலங்கியல் காட்சிக்கூடம்

சோலைக் காட்டின் ஊடே சிறுத்தையும் சில பறவைகளும் இருத் தல் போன்று மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட சூழல் காட்சிப் பெட்டி இக் காட்சிக்கூடத்தின் நடுப்பகுதியை அழகுப்படுத்துகிறது.

ஓர் உயிரணு அமீபா முதல் படிமலர்ச்சியின் உச்சியை எட்டியுள்ள பாலூட்டி வரை முறையான படிமலர்ச்சி வரிசையில் விலங்கின வகைபாட்டைக் காட்டிடும் இக்காட்சிக்கூடத்தின் மற்றொரு காட்சிப்

பெட்டி பார்வையாளரான பொதுமக்களுக்கும் உயிரியல் மாணாக் கருக்கும் ஓர் இனிய காட்சி விருந்து. இக்காட்சிக் கூடத்தில், மற்றொரு காட்சிப்பெட்டியானது வண்ணத் துப்பூச்சிகள் மற்றும் வண்டுகளின் வகைகளை காட்சிப்படுத்துகிறது.

## தாவரவியல் காட்சிக்கூடம்

தேக்கு, மா, ரோஸ் வுட், கருவேல், நாவல், செண்பகம், கார்டோ னியன் உள்ளிட்ட மரத் துண்டுகளைக் காட்சிப்படுத்துவதன் வாயிலாகப் பல்வேறு மர வகைகளின் பொருளியல் இன்றியமை யாமை இக்காட்சிக்கூடத்தில் எடுத்துக் காட்டுப்பட்டுள்ளது.

## நிலப்பொதியியல் காட்சிக்கூடம்

இம்மாவட்டத்தின் கனிம, பாறை வகைகளை இக்காட்சிக்கூடம் காட்சிப் படுத்துகிறது.

## இருப்புத் தொகுப்பிலுள்ள காட்சிப் பொருள்கள்

பொது மக்கள் பார்வைக்கெனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள மேற் கூறப் பட்ட காட்சிப் பொருள்களுடன் இம் மாவட்ட அருங்காட்சிகம் கீழ்க் காணும் காட்சிப் பொருள்களை கொண்டுள்ளது, இத்தகைய இருப்புத் தொகுப்புக் காட்சிப் பொருட்கள் வழக்கமாக ஆர்வமிக்க பொது மக்களுக்கும் ஆராய்ச்சியாளருக்கும் சிறப்பு வேண்டுகோளின் அடிப்படையில் காட்டப்படுகின்றன.

- அறிவியல் கள ஆராய்ச்சிகளின் வாயிலாகப் பெறப்பட்ட கீழக்கோத்தகிரிக்கு அருகிலுள்ள ஏழுகோட்டையிலிருந்து பெருங்கற்காலக் கண்டுபிடிப்புக்களான சுடுமண் எச்சங்கள்.

- அறிவியல் கள ஆராய்ச்சிகளின் வாயிலாகப் பெறப்பட்ட் பொக்காபுரம், செம்மநத்தம், பெருங்கற்காலப் பானை யோடுகள்

- பறிமுதல் வாயிலாகப் பெறப்பட்ட தேவி, திருமால், புத்தர்

நாட்டுபுறச் சிறுதெய்வம் உள்ளிட்ட சிறு வெண்கலப் படிமங்கள்.

- நீலகிரி மாவட்ட நூலக அலுவலரிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட தேவர் சோலை (மலையாள) பனையோலைச் சுவடிகள்.

- உதகை சி.பி.ஆர் சுற்றுச்சூழல் நடுவத்தின் பயிணாளர் திருமிகு சிவதாஸ் அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட பாலக்காட்டு (தமிழ்) பனையோலைச் சுவடிகள்.

- சென்னை மாநில அருங்காட்சியகத்தின் நாணயவியல் பிரிவிலிருந்து மாற்றம் வாயிலாகப் பெறப்பட்ட ஒரு திறள் உலோக அச்சுப் பண்டைய இந்தியக் காசுகள்.

- பறிமுதல் வாயிலாகப் பெறப்பட்ட ஒரு திறள் பண்டை இந்தியக் காசுகள் மற்றும் வெளிநாட்டுக் காசுகள்.

- புதையல் பொருள்களாக தேவர் சோலையிலிருந்து பெறப் பட்ட (கேரள உருளி வகை) பித்தளைப் பாண்டங்கள் நான்கு.

- சென்னை மாநில அருங்காட்சிகத்தின் மாந்தரியல் பிரிவி லிருந்து மாற்றம் வாயிலாகப் பெறப்பட்ட ஓரினை நூலிழை வளையல்கள், ஒரு இருமுக மர அகப்பை ஒரு (பிரம்பாலான) போலி எருமைக் கொம்பு உள்ளிட்ட தொதுவப் பழங்குடியினரது கலைப்பொருள்கள்.

- விலைக்குப் பெறப்பட்ட ஒரு திறள் தொதவப் பூப்பின்ன லாடைத் துணிகள்.

- கார்ஸ்மந்து தொதவச் சமுதாயப் பணியாளர் திருமதி சைமல்லி போத்துளிக் குட்டன் - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட ஒரு (பிரம்பாலான) போலி எருமைக் கொம்பு.

- கார்ஸ்மந்து தொதவச் சமுதாயப் பணியாளர் திருமதி குட்டன் - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட ஒரு நெருப்புக் கடைகோல்.

- நீலகிரி சுற்றுலா அலுவலரிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட ஒரு திறள் கோத்த மண்பாண்டங்கள்.

- திருச்சிகடி கோத்தச் சமுதாயப் பணியாளர் திருமிகு எம் கிருஷ்ணன் - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட மற்றொரு திறள் கோத்த மண்பாண்டங்கள்.

- உதகை சி.பி.ஆர் சுற்றுச்சூழல் கல்வி நடுவத்தின் திட்ட அலுவலர் திருமிகு எம்.குமரவேலு - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட தொட்லிங்கி இருளரது மூங்கில் பாண்ட மெழுகுவர்த்தித் தாங்கி.

- திருமிகு. ஆர். ரங்கநாதன். நிறுவனர் - இயக்குநர், பழங்குடியினர் மற்றும் கிராமிய முன்னேற்ற நடுவம், ஏலமன்னா, பந்தலூர் (வழி), கூடலூர் (வட்டம்) - அவர் களிடமிருந்து ஒரு திறள் பணியக் கலைப்பொருள்கள்.

- முருக்கம்பாடி (சிற்றூர்) கூடலூர் (வட்டம்) யைச் சார்ந்த பணியச் சமுதாயப் பணியாளர் திருமிகு வி.கிட்டன் - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட மற்றொரு திறள் பணியர் கலைப்பொருள்கள்.

- இம்மாட்ட அருங்காட்சியகத்தின் தொழில் நுட்ப உதவியாளர் - இடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட ஒரு திறள் படுகரது வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள்.

- கோத்தகிரி வட்டம், கண்ணேரிமுக்கு சிற்றூரைச் சார்ந்த திருமிகு சண்முகம் - அவர்களிடமிருந்து கொடையாகப் பெறப்பட்ட ஒரு புகிரி (எனும் நீண்ட புல்லாங் குழல் போன்ற படுகரது இசைக்கருவி).

- மாற்றம் வாயிலாகப் பெறப்பட்ட ஒரு திறள் தோல் பாவைகள்.


- மாற்றம் வாயிலாகப் பெறப்பட்ட ஒரு திறள் நாட்டுப்புற இசைக் கருவிகள்.

- போலி உயிரினமாக்கல் வாயிலாக உருவாக்கப்பட்ட பதப் படுத்தப்பட்ட ஒரு வாத்து, ஒரு முயல்.
- அறிவியல் கள ஆராய்ச்சிகளின் வாயிலாக மசினிகுடி காட்டுப் பகுதியிலிருந்து பெறப்பட்ட ஒரு திறல் ஒழுங்கு திரட்டப்பட்ட கடமான் எலும்புகள்.
- அறிவியல் கள ஆராய்ச்சிகளின் வாயிலாகத் திரட்டப்பட்டு, பின்னர் பதப்படுத்தப்பட்ட ஒரு திறள் நீலகிரித் தாவரங்கள்,
- அறிவியல் தள ஆராயச்சிகளின் வாயிலாகத் திரட்டப் பட்டு, பின்னர் பதப்படுத்தப்பட்ட ஒரு காட்டுச் சுரைக்காய், மற்றும்
- அறிவியல் கள ஆராய்ச்சிகளின் வாயிலாகச் செம்மநந்தம் பகுதியிலிருந்து திரட்டப்பட்ட காக்கைப் பொன் படலங்கள்.


வருங்காலத்தில் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ள காட்சிக் கூடங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ள மேற்குறித்த காட்சிக் கூடங்களுடன் இருப்புத் தொகுப்புகள் மற்றும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி, வருங்காலத்தில் இன்னும் சில, பல காட்சிக்கூடங்கள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு.

1. தொல்லெழுத்து வரையியல் காட்சிக்கூடம்,
2. இனக்குழு அணிகலன்கள் மற்றும் உடைகள் காட்சிக்கூடம்,

இவ்வாறாக, (காட்சிக்கூடங்களிலும் இருப்புத் தொகுப்புகளிலும் உள்ள) தனது காட்சிப் பொருள்களின் வாயிலாக, நீலகிரி மாவட்டத்தின் பண்முக மரபுச் செல்வத்தை வெளிச்சமிட்டு எடுத்துக்காட்டி, பார்வையிடும் பொது மக்களுக்கு முறைப்படுத்தப்படா அறிவூட்டும் ஒரு நிறுவனமாகவும் ஆராய்ச்சியாளருக்கு ஓர் உயர் ஆராய்ச்சி நிறுவமாக இவ் அருங்காட்சியகம் திகழ்கிறது.



ஆனைக்கட்டி இருளர் குடியிருப்புக்கு
முன்புறமுள்ள மூன்றடுக்கு நடுகல்



ஃபிரெஞ்சுக் கும்பினிக் காசுகள்